# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 22வது கூட்டறிக்கை 2019.12.03

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 22வது அமர்வு 2019.12.03 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 22வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் - 04/22/01**

சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந் நாட்டின் ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக நடந்த தேர்தலில் இந் நாட்டின் 7வது ஜனாதிபதியாக கௌரவ கோட்டாபய ராஜபக்ஸ அவர்கள் பெரும்பான்மை மக்களின் பெரும்பான்மை வாக்குகளை எடுத்து இந் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை நமது ஊர் சார்பிலும் இச் சபையின் சார்பிலும் அவர்களை நாம் வாழ்த்துவதோடு, இந் நாட்டின் சகல இன மக்களையும் ஒன்று சேர்த்து அவர்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்ய வழிவகுப்பார் என்ற நம்பிக்கையில் அவர் எடுக்கும் நடவடிக்கைகளில் இன ஐக்கியத்திற்காகவும், சிறுபான்மை மக்களின் இருப்பையும், ஒற்றுமையினையும் பாதுகாப்பதற்காக அவர் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் இச் சபையின் முழு ஆதரவு இருக்கும் என்று தெரிவித்தவனாக,

புதிய அரசு உருவாகியதற்கு பின் பல வரி சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதில் எமக்கு சாதகமாக இம் மாத ஆரம்பத்தில் இருந்து 15% மாக இருந்த Vat வரி 8% மாக குறைக்கப்பட்டு முதலாம் மாதம் முதலாம் திகதியில் இருந்து பிரதேச சபையின் வருமானம் ஒரு மாதத்திற்கு 25 மில்லியனுக்கு இல்லாத படியினால் எமக்கு Vat வரி அறவிடுவது இனி தேவைப்படாது. அதாவது இம் மாதம் 8% உம், ஜனவரி மாதத்தில் இருந்து எமது எந்த சேவைகளுக்கும் Vat வரி அறவிடப்படாது. இப்படியான மாற்றங்கள் நிச்சயமாக வரவேற்கத்தக்கன. அம் மாற்றங்கள் மக்களுக்காக பிரயோசனப்படும் என்று நினைக்கின்றேன்.

இம் மாதம் எமக்கு பொது நடவடிக்கைகள் செய்ய வேண்டிய மாதம் ஆகும். 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை எமது உள்ளூராட்சி ஆணையாளரின் தலைமையில் தேசிய வாசிப்பு மாதத்தின் இறுதி நிகழ்ச்சி அப்துல் மஜீட் மண்டபத்தில் நடைபெறும். மற்றும் சென்னல் கிராமத்தில் உள்ள வாசக சாலை திறப்பு போன்ற நிகழ்வுகளில் எல்லா கௌரவ உறுப்பினர்களும் கலந்து சிறப்பிக்க வேண்டும் என்று பணிவாக கேட்டுக் கொள்கின்றேன்.

நாக மரம், மதுர மரம், காயா மரங்கள் சபைக்கு கிடைத்துள்ளது. ஒவ்வொரு அங்கத்தவர்களும் ஆகக் குறைந்தது 10 மரங்கள் எடுத்து தங்களது வட்டாரங்களில், பிரதேசங்களில் ஒரு விளம்பரம் கொடுத்து நாட்ட வேண்டும்.

## தீர்மானம் - 04/22/02

சென்ற மாதம் 2019.11.01 தொடக்கம் 2019.11.29 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/22/03

கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு 2019.12.28 ஆந் திகதி நடாத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

இப் பிரேரணை சபையில் விபரிக்கப்பட்டதன் பின்னர் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/22/04**

நத்தார் பண்டிகை விழா முற்பணம் பெறத் தகுதியான ஊழியர்களுக்கு விழா முற்பணம் வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/22/05**

மழைக் காப்பு அங்கி பெறத் தகுதியான ஊழியர்களுக்கு மழைக் காப்பு அங்கி பெற்றுக் கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.முஹம்மட் சஹீல் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/22/06**

அம்பாரை 08 ம் வீதி (ஹுஸ்வா மத்ரசா வீதியின்) வடிகால் அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/22/07**

RA – 0258 ஆம் இலக்க ரெக்டர் திருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.முஹம்மட் சஹீல் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/22/08**

பிரதான அலுவலகத்தில் Aluminum Partition of Second Floor இல் அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/22/09**
எமது சபையினால் நடாத்தப்படும் முன் கல்விப் பாடசாலை மாணவர்களின் விடுகை மற்றும் வரவேற்பு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.முஹம்மட் சஹீல் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/22/10**
“வனரோபா” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட மரக்கன்றுகளை மஹல்லா மஹல்லா மையவாடி, சேதனப் பயளை தயாரிப்பு நிலையம், பழைய மடுவம் மற்றும் எமது பராமரிப்பிலுள்ள உப அலுவலகங்கள் என்பவற்றில் நடுவதற்குரிய 100 மரக்கூடுகள் பெறுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மடுவத்தில் இரத்தக் கழிவுகள் செல்வதற்கு தொட்டி உள்ளது. அதனை Service செய்ய வேண்டும். ஏனென்றால் அதில் சரியாக Gas Form பண்ணாததால் ஒரு Engineer எடுத்து அதனை செய்ய வேண்டும்.

**தீர்மானம் - 04/22/11**
விலங்கு அறுமனையிலுள்ள இரத்த சேகரிப்பு தொட்டிகளை புணரமைப்பதற்கும், அதற்குரிய சேவையினைப் பெறுவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/22/12**
சென்னல் வாசிப்பு நிலையத்திற்காக தளபாடக் கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/22/13**
மல்வத்தை உப அலுவலக கட்டடம் (கட்டம் - 02) திருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வி.ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பெண்களுக்கான வலுவூட்டல் இம் முறை எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்பதனால் ஒவ்வொரு கௌரவ உறுப்பினருக்கும் 01 இலட்சம் ரூபா பெறுமதியான திட்டங்களை செய்யலாம். ஆனால் பெறுபவர்கள் ஒவ்வொருவரும் தகுதியானவர்கள் என்று EDO, DS Certification உடன் 15 ஆந் திகதிக்குள் உங்களது List மற்றும் என்ன கொடுக்கப்போகின்றீர்கள் என்பதையும் செயலாளரிடம் கொடுத்து அதற்குரிய Procurement வேலைகளை செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த வருடம் எங்களுக்கு 01 இலட்சம் ரூபா சபையால் Allocation வழங்கப்பட்டது. ஆனால் அது எங்களுக்கு தேவையானளவு போதாமல் உள்ளது. அதை அதிகரித்து தந்தால் நன்றாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இம் முறை நான் 02 இலட்சம் படி செய்யலாமா? என்று பார்த்தேன். ஆனால் அதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் Budget இற்கும் வருமானத்திற்கும் இடையில் சிறிய வித்தியாசம் இருக்கின்றது. இதனால் 20 இலட்சம் மீண்டும் Deposit இல் இருந்து எடுக்க வேண்டும். எனவே இதையும் கூட்டுவதற்கு இயலாமல் இருக்கின்றது.

**தீர்மானம் - 04/22/14**
2019 ஆம் ஆண்டுக்கான பெண்கள் ஊக்குவிப்பிற்காக அனைத்து (20) கௌரவ உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 01 இலட்சம் ரூபாவுக்கான வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மடுவத்தில் இருக்கின்ற இரத்த சுத்திகரிப்பை மாற்றியமைக்க வேண்டும் என்று கூறினீர்கள். அதனுடன் தொடர்புபட்ட முன்னைய மடுவம் ஒன்று இருந்தது. அதை நான் இச் சபையில் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் அம் மடுவத்தில் Bio Gas செய்வதற்காக முரண்பட்ட சம்பவங்கள் உள்ளது. அக் காலத்திலே 25 இலட்சம் முதலீடு செய்து அதற்கு மேல் செப்புக் கொப்பர் ஒன்று போட்டு பிரச்சினை வந்தது. அது தற்போது இருக்கின்றதா? இல்லையா? என்று தெரியாது. அது எமது சபைக்கான சொத்து அதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

எமது ஊரில் மழை காலம் என்பதனால் ஹிஜ்ரா சந்தியில் தற்போது பிரதான இடம் குழி விழுந்துள்ளது. அதனை நாம் RDA இற்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதே போல் பௌஸ் மாவத்தை வீதிகளில் மழைகாலத்தில் ஏற்படுகின்ற பாதிப்புகளை உடனடியாக அறிவித்து அவற்றை செய்யாவிட்டால் நிரந்தரமாக அவ் வீதிகள் அழிந்து விடும். ஏனென்றால் எமது ஊர் மட்டும்தான் மழை பெய்து முடிந்தவுடன் நீர் இல்லாமல் உடனே வற்றக்கூடிய வாய்ப்பில் உள்ளது. எனவே இவ் விடயத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

கட்சி சார்பாக ஜனாதிபதி அவர்களுக்கு எமது சபை ஏகமனதாக வாழ்த்து தெரிவித்தவனாகவும், SLFP ஐ பொருத்தவரையில் நாமும் கூட்டுச் சேர்ந்து கட்சியில் இருந்த வாக்குகளை அளித்ததன் பயனாகத்தான் மிகவும் அமோகமான வெற்றியை காணக்கூடியதாக இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக முக்கியமான கருத்து என்னவென்றால் தேர்தல் காலங்களில் இச் சபையிலும்,

வெளியிடங்களிலும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கொள்கை இருக்கின்றது. அதற்காக எதிர்க்கட்சி என்ற சொல்லை மாற்றியமைத்து எதிர்க்கருத்துள்ளவர்கள் ஒவ்வொரு கட்சியையும் கௌரவப்படுத்தி எதிர்க்கருத்துடையவர்கள் இருக்கக் கூடாது என்ற கருத்தும் இல்லை. எனவே தேர்தல் காலத்தில் இருந்து அவைகளை மறந்து சபைக்குள் வந்தால் நாம் ஒரு கட்சி தான். சபைக் கட்சி என்ற அமைப்பில்தான் செல்ல வேண்டும்.

அதற்கு நாம் ஜனனாயக முறையில் இடமளிக்க வேண்டும். எவ் அமைப்பிலும் நாம் எல்லோரும் சேர்ந்து இலங்கையில் இருக்கின்ற அனேகமான சபைகள் ஜனாதியை தெரிவு செய்யப்பட்டவரின் கட்சியில்தான் இருக்கின்றது. எனவே எதிர்காலத்தில் நான் நினைக்கின்றேன் எமக்கு ஒரு அதிகாரப் பலம் ஒன்று வரும். சபையில் இருக்கின்ற அனைத்து கட்சிகளுக்குரியவர்களும் தங்களுக்கு தெரிந்தவர்கள். குறிப்பாக எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டிய விடயம் என்னவென்றால் கௌரவ தவிசாளர் அவர்கள் ஜனாதிபதி அவர்களுக்கு சிறந்த ஒரு நண்பன். தேர்தல் காலத்தில் நாங்கள் நேரிலே சென்று ஒரு Hotel இல் அவர் பாதுகாப்பு செயலாளராக இருக்கின்ற போது அவருடன் பேசுவதற்கு கஸ்டமாக இருக்கின்ற காலகட்டத்தில் சுமார் 1 ½ மணித்தியாலயம் தனியாக கௌரவ தவிசாளர் அவர்கள் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவ் உறவுகளை எல்லாம் நாங்கள் தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்துவதில்லை. அவர் நல்ல வார்த்தை பிரயோகத்தை தெரிவித்திருந்தார். அதாவது அனைவரும் சேர்ந்துதான் செய்ய வேண்டும். நானும் இச் சபையில் அடிக்கடி கூறுவது என்னவென்றால் எமது சபைகளின் வேலைகள் எல்லாம் ஓரளவு செய்துள்ளோம். எமது கௌரவ உறுப்பினர் யூசுப் லெவ்வை அவர்கள் எவ்வளவோ வேலைகளை கொண்டு வந்தார். நாம் யாருமே கட்சி பேதமாக தடுத்து அதை செய்யவில்லை. இதற்குள் வந்தால் வேலைகள் செய்வதைத்தான் பார்க்க வேண்டும். ஏனென்றால் இன்னும் சிறிது காலம் மாத்திரம் உள்ளது. எமது ஊரை திட்டமிட்டு செய்ய வேண்டும். எமது பிரதேச சபைக்கு கொண்டு வருகின்ற வளங்களை எவராக இருந்தாலும் அதனை பெருமைப்பட்டு வரவேற்று தொழில்நுட்ப ரீதியில் பயன்படுத்தி எமது எதிர்காலத்தை கொண்டு செல்ல வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்கள் கூறியது போல் நமக்கு தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், தனிப்பட்ட உறவுகள் இருந்தாலும் இச் சம்மாந்துறை பிரதேச சபை 2011 ஆம் ஆண்டில் இருந்து ஒரு வித்தியாசமான சபையாகத்தான் இயங்கிக் கொண்டு வருகின்றது. எதிர்க்கட்சி என்று கடிதம் வந்தால் கூட நான் அதை அங்கீகரிப்பதில்லை. ஏனென்றால் நமக்கு ஒரு எதிர்க்கட்சி இல்லை. ஆனால் மாற்றுக் கருத்துள்ள அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். ஏனென்றால் எதிர்க்கட்சி என்று எடுத்தவுடன் எல்லாவற்றையும் எதிர்க்கின்ற என்று அல்லாமல் ஊருக்காக உருவாக்கப்பட்ட நிர்வாகம். தற்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் 4 அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். அவ் 4 அங்கத்தவர்களும் இந்த அரசாங்கத்தின் பங்காளிகளாக வரவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் மூலமாகத்தான் சபையோ, மக்களோ பயனடையலாம். நான் மட்டும் ஜனாதிபதியுடன் சேர்ந்து பயணிப்பது இல்லை. தற்போது அவர் நாட்டின் ஜனாதிபதி ஆவார். எனக்கும் அவருக்கும் சினேகிதம் வந்ததற்கு காரணம் 02 பேரும் ஒழுங்கை விரும்புபவர்கள். சட்டத்தை மதிக்க வேண்டும் எதுவும் ஒழுங்காக நடக்க வேண்டும்.

நாளை UDA Director வருகின்றார். அவர் 2 Project ஆரம்பிப்பதாக கூறினார். ஏனென்றால் சென்ற அரசாங்கத்தில் எமக்கு பெரிதாக UDA ஆல் கேட்ட விடயங்கள் நடக்க இயலாத காரணத்தினால் உடனடியாக முதல் Project ஆக இருப்பது மைதானம் அதனை பொது மைதானமாக மாற்ற இயலாது. ஆனால் அதனை சுகதாச Indoor Stadium போல் இதையும் பெரிய ஒரு Indoor Stadium ஆக மாற்றினால் Volley Ball, Net Ball, Bedminton போன்றவைகள் விளையாடலாம். மற்றயது எமது மையவாடி Project. அது இரண்டையும் இனங்கண்டு அதனை பார்ப்பதற்கு நாளை வருகின்றார். எந்த அரசாங்கம் இருந்தாலும் எமக்கு எல்லா கட்சிகளின் பிரதிநிதிகளும்

இருக்கின்றார்கள். அதை நாம் சரியான முறையில் பாவித்து கொண்டு செல்லுகின்ற போது எப் பிரச்சினைகளும் எமக்கு வராது.

இன்று காலையில் மணிக்கூட்டு கோபுரத்தை பார்த்துட்டு வரும் போது அதில் உள்ள டோம் அப்படியோ இறங்கி Circuit எல்லாம் நீர் காணப்பட்டது. அது பாரிய வேலை. டோம் மேல் தொப்பி போட்டு மூட வேண்டும். ஏனென்றால் அதில் உள்ளவைகள் எல்லாம் Electronic சாதனங்கள். நாம் இதனை எதிர்பார்க்கவில்லை.

சென்ற கிழமை RDA யிடம் இருந்து தெரு விளக்கு தொடர்பாக ஒரு கடிதம் வந்தது. அது செயலாளருக்குதான் அழைப்பு விடுக்கப்பட்டது. இருந்தாலும் முன் அறிவித்தல் ஒன்றும் இல்லாத படியினால் அக் கூட்டத்திற்கு நான் சென்றேன். அவர்கள் 800M க்கு தெரு விளக்கு பொருத்துவதற்கு Contract ஒன்று ஒதுக்கியுள்ளார்கள். ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் முன்மொழிவாக வந்துள்ளது. நான் அவர்களிடம் எவ்விடத்தில் இருந்து ஆரம்பிக்கப்போகின்றீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ஹிஜ்ரா சந்தியில் இருந்து 800M இயலுமான வரை செய்வதாக கூறினார்கள். அதற்கு நான் கூறினேன் அது செய்ய இயலாது. அப்படி செய்வது என்றால் தைக்காப்பள்ளி வரைதான் செய்யலாம். அதற்கு பின்னர் உள்ள கட்டடங்கள் எல்லாம் வீதியோரம் இருக்கின்றது. எனவே வடிகான் அமைத்து தூண் போடுவதற்குரிய இடம் இல்லை.

நெல்லுப்பிடிச் சந்தியில் இருந்து பூமரத்து சந்தி வரை வரலாம். ஆனால் அதிலும் சில இடங்களில் மரங்கள் இருக்கின்றது. மரங்களின் வேர்கள் எல்லாம் வெட்டப்படும். இதற்கு நீங்கள் நேரத்துடன் சபையுடன் கலந்தாலோசிக்க வேண்டும். பாதைகளும் செய்கின்ற போது இதுதான் நடந்தது. ஒரு தனியார் பாதைக்கு அதுவும் அரச பணத்தை செலவளித்து பெயரையும் பிழையாக போடுகின்றீர்கள். இப்படியான விடயங்களில் நீங்கள் திட்டமிடுவதற்கு முதல் பிரதேச சபையுடன் கலந்தாலோசித்து செய்ய வேண்டும். தற்போது அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா? இல்லையா? என்று தெரியாது. ஆனால் 800M க்கு ஒரு Contract ஒன்று RDA ஆல் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் Dr.S.M.M.இஸ்மாயில் அவர்களின் Allocation ஆகும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை விஸ்னு கோயில் சந்தியில் இருந்து மல்வத்தை பாடசாலைக்குமான 1KM இற்குரிய வீதி விளக்கு பொருத்துவதற்கான முன்மொழிவை சமர்ப்பித்திருக்கின்றேன். அதே போன்று பழைய வளத்தாப்பிட்டி தொடக்கம் புதிய வளத்தாப்பிட்டி மயானம் வரைக்கும், மயானத்தில் இருந்து காஞ்சிரையடி வரைக்கும் 03 கட்டங்களாக மின் விளக்குகள் பொருத்தித் தருமாறு கேட்டிருந்தேன். அதில் முதலாம் கட்டமாக மல்வத்தை விஸ்னு கோயிலில் இருந்து பாடசாலை வரைக்கும் மின் விளக்குகள் போடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு ஒப்பந்தம் செய்து அதற்கான வேலைகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை இச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போதைய ஜனாதிபதி கௌரவ கோட்டாபய ராஜபக்ஸ அவர்களுக்கு எங்களது பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரினது ஊடாகவும் வாழ்த்து தெரிவித்துக் கொள்வதுடன், தற்போது எமது பிரதேச சபை உறுப்பினர்கள் ஊடாக அபிவிருத்திகள் எல்லாம் முன்னெடுத்து செல்லப்படும் என்று அறிக்கைகள் விடுக்கப்பட்டிருப்பதால் அதில் நாம் எல்லோரும் சந்தோசப்பட்டவர்களாகவும், தற்போது பெய்து வரும் மழை காரணமாக மழை வெள்ளம் அதிகரித்து வடிகான்கள் நிரம்பி வழிந்தோடி பாதைகள் எல்லாம் சீரழிந்து காணப்படுவதோடு, முக்கியமாக விளினியடி சந்தியில் பிரயாணங்கள் கூடுதலாக நடைபெறுகின்ற இடமாக இருப்பதனால் அவ் இடத்தில் ஒரு பாரிய அகலமான கொங்கிறீட்டை இட்டு சரி செய்யலாம் என்று நினைக்கின்றேன்.

தற்போதும் கூட ஒரு நபர் மோட்டார் சைக்கிளில் விழுந்து சிறிய காயத்துடன் தப்பிவிட்டார். ஆனால் அதே நேரம் பாரிய விபத்தும் அவ்விடத்தில் ஏற்படலாம் என்பது எமது கண் ஊடாக காணக்கூடியதாக இருக்கின்றது. மேலும் வடிகான்களில் கல்லுகளையும், மண்ணையும் இட்டு மறிப்பதால் நீர் வழிந்தோடி பாதைகள் சீரழிந்து காணப்படுகின்றது. இதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், வடிகான்களை ஒடுக்கமாக கட்டுவதனாலும் மக்கள் கடும் சீரழிகின்றார்கள். இது தொடர்பாக நான் நீர்பாசனத் திணைக்களத்தில் அறிக்கை செய்த போது அவர்கள் பிரதேச சபைக்கு அறிவித்தல் கொடுத்து இதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம் என்று கூறினார்கள். ஆனால் நீங்களும் இதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று மக்களுக்காக வாதாட வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

பொலிஸாரிடம் சென்றால் சட்டம் என்றும் அதிகாரம் என்றும் பக்கச்சார்பற்ற ஒரு பிரச்சினை நிலவுவதால் எங்களுக்கு முகங்கொடுப்பதில் மிகவும் கஸ்டமாக உள்ளது. எனவே இதில் கவனம் செலுத்தி வடிகான் அமைப்பதில் சற்று விரிவாக அமைக்க வேண்டும் என்றும் மக்கள் கூடுதலாக வாழும் பிரதேசத்தில் 03 அடி அல்லது 04 அடி என்று வருகின்ற போது 02 அடி 1 ½ அடியாக குறைத்து கட்டுவதால் நீர் நிரம்பி வழிந்தோடி பாதைகளும் சீரழிந்து நீர் ஓடமுடியாமல் மக்கள் கஸ்டப்படுகின்றார்கள். எத்தனையோ மக்களின் வளவுகள் நீரினால் மூழ்கி வீடுகளுக்குள்ளும் நீர் தேங்கி அதை வெளியில் செலுத்த முடியாமல் அள்ளி இறைத்துக் கொண்டும் இருக்கின்றார்கள். எனவே இதனை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கௌரவ தவிசாளர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சபையின் தவிசாளருக்கு அதிகாரத்தை கொடுப்பது சபை. நீங்கள் என்று கூறாமல் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறுவதுதான் சரியான சொல். நீங்கள் இல்லாமல் நான் இல்லை நான் சபையில் எடுக்கின்ற தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற அதிகாரம் கொண்டவன். சபைகளில் சபை சார்பாக சபைக்கு எது வந்தாலும் தவிசாளருக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் சொந்தம். இவ் ஊரில் சட்ட விரோதமான செயல்கள் கூடுதலாக நடக்கின்றது. ஆனால் நாம் கவனிப்பதில்லை ஏனென்றால் தவிசாளர் நினைத்தால் செய்யலாம் தவிசாளரிடம் கூறுங்கள் என்று நினைக்கின்றோம். அவ்வாறில்லாமல் உங்களது பகுதிகளுக்கு நீங்கள்தான் தவிசாளர்கள் அதை செய்விக்க வேண்டியது எல்லோரினதும் பொறுப்பு ஆகும்.

தற்போது வடிகான்களுக்குள் குப்பைகளை போடுவது யார்? மக்கள்தான் ஆனால் யார் போடுகின்றார்கள் என்று காட்டிக் கொடுக்கமாட்டார்கள். தற்போது கௌரவ உறுப்பினர்களுக்கு தெரியும் மழைகாலம் வந்தவுடன் எமது Works Team ஒன்று 24 மணித்தியாலயமும் வேலை செய்கின்றார்கள். ஏதாவது பிரச்சினை வந்தால் தொழில்நுட்ப உத்தியோகத்தர் றசாக் அவருக்கு இவ் இடத்தில் பிரச்சினை உள்ளது என்று கூறினால் அவர் இந்த குழுவை வைத்துக் கொண்டு அதை செய்வார். ஆனால் மக்களும் உணர வேண்டும். அவர்களுக்கும் பொறுப்பு இருக்கின்றது. குப்பை போடுகின்றவர்கள்தான் முறைப்பாடும் செய்கின்றார்கள். வடிகான் நிரம்பி ஓடினால் அதில் குப்பைகளை போடுகின்றார்கள்.

விளினியடியில் உள்ள பிரச்சினை என்னவென்றால் அது அகலமான வீதி. இவ் வீதி RDA க்கு சொந்தமானது. இதில் ஒரு பாலமாக போடுவது என்றால் அகலமாக இருந்தால்தான் கீழுக்கு துப்பரவு செய்யலாம். எனவே எப்படியும் Slab தான் போட வேண்டும். ஆனால் அதிலும் 30Kg இற்கு மேல் செய்யமாட்டார்கள். ஏனென்றால் அதை ஒருவரால் தூக்க இயலாது என்பதால் ஆகும். இது தொடர்பாக RDA இற்கு அறிவித்தல் கொடுப்போம். நான் நினைக்கின்றேன் அவ்விடத்தில் பெரிய Round About ஒன்று உருவாகலாம். நகர திட்டமிடல் என்று வரும் போது ஆண்டியர் சந்தி, நெல்லுப்பிடிச் சந்தி 05 அல்லது 10 வருடத்திற்குள் பாரிய ஒரு மாற்றத்தை காணலாம். அதிமேதகு ஜனாதிபதியின் உரையில் வட கிழக்கு அபிவிருத்தியில் நான் மிகவும் கவனமாக இருப்பேன் என்று கூறியுள்ளார். எனவே பாரிய திட்டங்கள் வரப்போகின்றது. இதற்கு பங்காளிகளாக மாறுவது என்றால் எமக்குள் கட்டுப்பாடு இருக்க வேண்டும்.

உதாரணமாக சென்ற கிழமை ஒரு முறைப்பாடு ஒன்று வந்தது. அதாவது ஒரு வீட்டுக்காரர் அவரின் மதிலில் இருந்து இடம் விட்டு சரியாக கட்டியுள்ளேன் என்றும் மற்றவர் மதிலில் சேர்த்து ஒத்தாப்பு இறக்கியுள்ளார் என்றும் முறைப்பாடு வந்தது. ஆனால் அவர்களிடம் கட்டட அனுமதி எடுத்துள்ளீரா என்று கேட்டால் இல்லை. ஊர் எல்லாம் அவ்வாறு தானே உள்ளது என்னுடைய வீட்டை உடைப்பது என்றால் எல்லோரினதும் தானே உடைக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள். இது தான் எல்லா இடத்திலும் உள்ள பிரச்சினை ஆகும். கிராம உத்தியோகத்தர்களோ, உறுப்பினர்களோ, உத்தியோகத்தர்களோ ஒருவரும் கவனிப்பதில்லை. ஆனால் மதிலும் சட்டவிரோதம், வீடும் சட்டவிரோதம், செய்யப் போகின்றதும் சட்டவிரோதம் இதற்கு எப்படி நீதி வழங்குவது?

இம்முறை 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நாம் மொத்தமாக சபையின் வருமானமாக ரூபா 64,526,429.14 Budget பண்ணி இருந்தோம். அதில் 11ம் மாதம் வரைக்கும் ரூபா 62,761,394.53 வருமானமாக எடுத்து விட்டோம். ஆனால் குறைபாடாக ஏறத்தாள ரூபா 1,765,034.00 உள்ளது. இதில் Budget செய்த செலவுகள் பூர்த்தி செய்வதற்கு சபையின் மேலதிகமான பணங்கள் நிலையான வைப்பில் இருக்கின்றது. எனவே இதில் இருந்து இதற்கு தேவையான குறைபாடாக வரும் தொகையை வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட நிதியிலிருந்து எடுத்து இவ் வருடம் திட்டமிட்ட வேலைகளை நிறைவு செய்ய வேண்டும்.

**தீர்மானம் - 04/22/15**

இவ் வருடத்தின் திட்டமிட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு பற்றாக்குறையாக வரும் தொகையை வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட நிதியிலிருந்து எடுத்து அவ் வேலைகளை நிறைவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது வடிகான்கள் மிகவும் மோசமாக உள்ளது. அவற்றை துப்பரவு செய்யாவிட்டால் வீதிகளும் சீரழிந்து விடும். தற்போது MP வீதியிலும் ஒரு கிழமைக்கு முன் தார் ஊற்றினார்கள். ஆனால் அதிலும் நீர் மேல் எழும்பி வந்து ஒரு இடத்தில் உடைத்து சென்றுள்ளது. எனவே வடிகான்கள் துப்பரவு செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வடிகான் துப்பரவு செய்வது பிரச்சினை இல்லை. ஆனால் வடிகான்களுக்குள் குப்பைகளை போடுகின்றவர்களுக்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுத்தால் மாத்திரம் பிரச்சினை இல்லாமல் இருக்கும். ஏனென்றால் எமது ஊரில் ஹிஜ்ரா சந்திக்கும் அலவக்கரைக்கும் இடையில் கிட்டத்தட்ட 35 அல்லது 40 அடி வித்தியாசம். மேல் இருந்து போடுகின்ற குப்பைகள் அதாவது முருங்கை மர கட்டைகள், வாழைத் தண்டுகள், Pamper Bag கள் எல்லாம் இடையில் தேங்கி நிற்கின்றது. சூழல் பாதுகாப்பு என்கின்ற விடயத்தில் ஜனாதிபதி அவர்கள் மிகவும் கண்டிப்பாக இருப்பார். பொலிஸ் உம், பிரதேச சபையும் சேர்ந்து மிகவும் கடினமான நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது இருக்கின்ற பெரிய ஆபத்து என்னவென்றால் தியேட்டர் வீதியில் உள்ள வாகை மரத்தின் பெரிய கந்து ஒன்று இறந்து காணப்படுகின்றது. எப்போது விழும் என்று தெரியாது. விழுந்தால் தவிசாளருக்குதான் ஏசப்படும். தற்போது மரம் வெட்டுவதற்குரிய அதிகாரம் சபையிடம் இல்லை. ஆனால் நாம் பொலிசையும் சேர்த்து சிறிய சிறிய துண்டுகளாவது வெட்டி எடுக்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்களும், நீங்களும் ஒரு கருத்தை முன்வைத்தீர்கள் அதாவது எமது சபையிலே எதிர்க்கட்சி ஒன்று இல்லை. எதிர்க்கருத்துள்ளவர்கள் மாத்திரம்தான் இருக்கின்றார்கள். உண்மையிலே வரவேற்கத்தக்க விடயம் ஆகும். ஒரு சபையோ அல்லது ஒரு விடயமோ முறையாக இடம்பெற வேண்டுமானால் எதிர்க்கட்சி ஒன்று இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். நாம் எதிர்க்கட்சி இல்லாததும் ஒரு குறையாகவே நான் காண்கின்றேன். அது எதிர்க் கட்சி அல்ல எதிர்க்கருத்து அதாவது கேள்வி கேட்கும் ஒரு இடமாகவும் இந்த இடம் இருக்க வேண்டும். நாம் விடயங்களை பேசிவிட்டு செல்வது மாத்திரமல்ல எமது குறிக்கோள். பேசிய விடயங்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும். நாம் எடுத்த பல முடிவுகள் செயற்படாமல் உள்ளது. உதாரணமாக கடந்த கூட்டத்திலே மையவாடிகளை சபைக்குள் உள்வாங்குவது என்று தீர்மானத்தை மேற்கொண்டோம். ஆனால் அதற்கான வேலைத்திட்டங்கள் இதுவரை இடம்பெற்றுள்ளதா? என்பது ஒரு தெளிவில்லாமல் இருக்கின்றது. இதே போன்று பலதரப்பட்ட தீர்மானங்களை நாம் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். அவை பற்றியும் நாம் எதிர்காலங்களில் ஆராய்ந்து எந்த அளவுக்கு முடிந்துள்ளது என்றும் அதற்கான அறிக்கைகளும் எதிர்வரும் காலங்களிலே சபைக்கு முன்வைக்கப்பட வேண்டும் என்பது ஒரு கருத்தாக இருக்கின்றது.

வாய்க்கால்கள், வடிகான்கள் கட்டுவதாக ஒரு தீர்மானம் எடுத்தோம் அல்லது சந்தைக் கட்டடத்தை நீடிப்பதாக ஒரு தீர்மானம் எடுத்தோம். அவ் வேலை நிறைவு பெற்றிருந்தால் அல்லது அதன் தன்மை இன்மை என்பன பற்றி அடுத்து வரும் கூட்டங்களில் எங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு உத்தியோகத்தர் ஊடாக சபைக்கு கிடைத்தால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன். நாம் விசேடமான தீர்மானத்தை மேற்கொண்டோம் அதாவது வீதிகளுக்கு பெயரிடுதல் தொடர்பாக ஆனால் நாம் இன்னும் எத்தனை வீதிகளுக்கு பெயரிட்டிருக்கின்றோம் என்று எனக்கு தெரியாது. அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் அதன் கெஸட் பிரதிகள் எங்களுக்கு தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். எமது குறிக்கோளை அடைவதற்கு நாம் எவ்வாறு எமது திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும். அடுத்த சபையிலே நாம் எடுத்த தீர்மானங்களின் முன்னேற்றத்தை கேட்க எத்தனித்திருக்கின்றேன். அச் சந்தர்ப்பத்திலே என்னை எதிர்க்கட்சியாக பார்க்காது நாம் எமது இலக்கை அடைவதற்காக தொடருகின்ற பயணமாக இருக்க வேண்டும் என்று சபையை கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் செய்யும் நல்ல திட்டங்களை கன்னியப்படுத்த வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. அந்த அடிப்படையிலே நான் நினைக்கின்றேன் இலங்கையில் சிங்களப் பகுதிகளை தவிர தமிழ் முஸ்லிம் சபைகள் இருக்கின்ற பிரதேசங்களிலே ஊழியர்களை ஒன்றினைத்து ஒரு நிகழ்வு நடாத்தப்படுவதில்லை உண்மையிலே தாங்கள் தொடர்ந்து கூறிவரும் கருத்து அதாவது பிரதேச சபை என்றால் அதன் அடிமட்ட ஊழியர்கள் தான் சபை என்று இது உண்மைதான். பிரதேச சபையின் பிரதான கடமை நகரை அழங்கரிப்பது சுத்தப்படுத்துவது ஆகும். அவர்களை கண்ணியப்படுத்துவதற்காக நீங்கள் வருடந்தோறும் ஏற்படுத்தி வருகின்ற நிகழ்வு இவ் வருடமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்காக நான் எனது மனமார்ந்த சந்தோசத்தையும், பாராட்டுக்களையும் இச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். அதே போல் மல்வத்தை உப அலுவலக கட்டடம் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு அதன் கூரை முற்றுமுழுதாக பழுதடைந்து இருந்தது. அதனை ஏரத்தாள 7 இலட்சம் சபையின் நிதி ஒதுக்கின் ஊடாக நிறைவு செய்திருந்தோம். தற்போது அதற்கான ஜன்னல்கள், தரை கொங்கிறீட் இடப்பட்டு சீர் செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு சீர் செய்தால் அப் பகுதிக்கு சிறப்பான பாலர் பாடசாலை கிடைக்க சநதர்ப்பம் இருக்கின்றது. எனவே அதற்காக நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு மகிழ்ச்சியடைகின்றேன்.

பெண்கள் வலுவூட்டல் என்பது பெண்களுக்காக விசேடமாக ஒதுக்கப்பட்டது. ஆனால் எமது கோரிக்கையை ஏற்று நிலையான வைப்பில் இருந்து ஒரு தொகையை ஒதுக்கி அத்தனை கௌரவ உறுப்பினர்களுக்கும் பெற்றுக் கொடுத்ததற்கு நான் எனது சந்தோசத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம் முன்மொழிவிலே மல்வத்தை சந்தை நீடிப்பதற்கான ஒரு முன்மொழிவை சமர்ப்பித்தேன். ஆனால் அதற்கான தீர்மானம் எடுக்கப்படவில்லை. எனவே அதனை இவ் வருடத்திற்குள் செய்வதா? அதற்கான மதிப்பீடு எவ்வளவு? அதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றதா? என்பன பற்றியும் ஒரு தெளிவூட்டல் வேண்டும் என்பதை தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறிய கருத்தோடு நான் உடன்படுகின்றேன். ஏனென்றால் சபையின் தீர்மானங்கள் நிறைவேற்றும் கடமை நிர்வாகிகளுக்கு உடையது. ஒவ்வொரு மாதமும் அடுத்த சபையில் சமர்ப்பிக்க வேண்டியது எமது கடமை ஆகும். ஆனால் அது தவறியது பாரிய குற்றம் ஆகும். அதில் நானும் ஒரு பங்காளி. கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் இவ் வருடத்திற்குரிய வரவு செலவுத் திட்ட பிரதி தரப்படுகின்றது. அவ் வரவு செலவுத் திட்டப் பிரதியில் எதுக்காக என்ன ஒதுக்கியுள்ளோம் என்று அனைவருக்கும் தெரியும். அதற்குள் செய்ய வேண்டியது இருந்தால் அதை நாம் செய்யலாம். ஆனால் செய்ய முடியாதவைகள் வரும் போது நமக்குள் கலந்தாலோசித்து அதற்கு செய்யும் வழிகளை தேடவேண்டும். இச் சபையை இயக்குவதில் எவ்வளவு சவால் இருக்கின்றது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதை நான் குறையாக எடுக்கவில்லை.

நிச்சயமாக எதிர்க்கட்சி இல்லாவிட்டாலும் அதில் ஒரு கண்காணிப்பு அங்கத்தவர்கள் இருக்க வேண்டும். நான் ஒன்று செய்யாவிட்டால் அதற்கு நீங்களும் பொறுப்பாளிகள். உதாரணமாக ஊழியர்களை உள்வாங்குவது தொடர்பாக கௌரவ உறுப்பினர்களுக்கு தன் சிபார்சுகளை எடுக்க வேண்டும் என்ற எண்ணம். ஆனால் ஒரு தவிசாளராக முதல் கவனிக்க வேண்டியது இவ் உள்வாங்கப்படுபவர்களினால் இச் சபையின் நடவடிக்கைகளை கொண்டு செல்லலாமா? அல்லது சபையின் நடவடிக்கைகளுக்கு பொருத்தமானவர்கள் உள்வாங்கப்பட வேண்டும். இம்முறை இவ் உள்வாங்கல்களில் ஆய்வு உத்தியோகத்தரின் தலைமையில் நிந்தவூர் பிரதேச சபையின் செயலாளர், LGA ஆகிய 03 வெளிஉத்தியோகத்தர்களினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டது. கட்சி பேதம் இல்லாமல் சில தேவைப்பாடுகள் இருந்தது. அதற்கு தகுதியானவர்களை வரவு செலவுத் திட்டத்திற்கு ஏற்ப 22 பேர் தெரிவு செய்தோம். நோக்கம் என்னவென்றால் சபையின் நடவடிக்கைகள் தடையில்லாமல் நடக்க வேண்டும்.

கூட்டறிக்கை வாசிக்கின்ற போது தீர்மானங்கள் இருந்தால் அது நிறைவேற்றுப்படாவிட்டால் அடுத்த கூட்டத்தில் உங்கள் எல்லோருக்கும் உரிமை இருக்கின்றது. இத்தனையாவது தீர்மானத்தின் முன்னேற்றம் என்ன என்று என்னிடம் கேட்கலாம். அது எனக்கு எதிராக கேட்பது இல்லையே. உண்மையாக அதில் ஆர்வம் இருந்தால் அம் மாத காலத்துக்குள் அம் முன்னேற்றத்தினை கேட்டு அறியலாம். ஒவ்வொரு சபையிலும் நாம் தீர்மானம் எடுக்கின்றோம். எடுக்கின்ற தீர்மானங்கள் நிறைவேற்றுப்படாவிட்டால் அதற்குரிய காரணம் அல்லது முன்னேற்றம் என்ன என்று சபைக்கு அறியத்தர வேண்டும் என்பது உண்மையிலே நியாயமான வேண்டுகோள் நாம் அதை செய்ய வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உங்களது கருத்துக்கு முற்றுமுழுதாக உடன்படுகின்றேன். இதற்கு நீங்கள் அல்ல பொறுப்பாளி நாங்களேதான். ஏனெனில் இச் சபையின் ஒரு அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டு 02 வருடத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்ற காலப்பகுதிலே நான் அடிக்கடி யோசிப்பது சபைக்கு செல்கின்றோம், பல தீர்மானங்களை முன்வைக்கின்றோம் அத்தோடு எமது கடமை முடிந்துவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கின்றோம். நாம் யார்? எமது பொறுப்பு என்ன? எமது செயற்பாடு என்ன? நமது இலக்கை அடைந்துவிட்டோமா? அல்லது மக்கள் நம் மீது வைத்த இலக்கை அடைந்து விட்டோமா? என்று அதற்கு தீர்வு காணவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் சில வேலைகளை செய்து கொண்டிருப்பதால் ஓரளவு மக்களையும், சமூகத்தையும் சமாளித்துக் கொண்டிருக்கின்றேன்.

ஆனால் ஏனைய உறுப்பினர்கள் எப்படி முகங்கொடுக்கின்றார்கள் என்பது மிகப் பெரிய கேள்வியாக இருக்கின்றது. கௌரவ உறுப்பினர்களிடம் இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்வது நீங்கள் எமது சபையால் செயற்படுத்தக்கூடிய தீர்மானங்களை உங்களது வட்டார மக்களுக்காக முன்வையுங்கள். அதே சந்தர்ப்பத்தில் அதனை எந்த அளவு எமது சபையூடாக செயற்படுத்த முடியும் என்பதை சபையால் சிந்தித்து அல்லது வெளியால் இருந்து இதற்கான ஆதரவை தேடலாம் அல்லது எவ்வாறு பயன்படுத்தலாம் என்று நாம் சபையுடன் தொடர்ந்து நகர்ந்தோமானால் எம்மை நியமித்த மக்களுக்கு நமது பொறுப்பினை செய்கின்றோம் என்ற நிலைப்பாடு இயல்பாகவே தோன்றிவிடும். அது கடந்த காலங்களிலே இல்லை என்பது எனது நிலைப்பாடு. எனவே, இத் தீர்மானத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்று சபையையும் உத்தியோகத்தர்களையும் சங்கடப்படுத்தக்கூடிய தீர்மானங்களை எடுத்து அதனை வைத்து சபையை சங்கடப்படுத்தக்கூடாது என்றும் ஒரு வேண்டுகோளாக வைத்து நிறைவு செய்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்பொழுது சாதாரண தரப் பரீட்சை நடந்து கொண்டிருக்கின்றது. எமது சம்மாந்துறை பிரதேசத்திற்குட்பட்ட உயர்தரம் படிக்கின்ற மாணவ மாணவிகள் மேலதிக வகுப்பிற்காக கல்முனைக்கு செல்கின்றார்கள். அவ் வகுப்புகளுக்கு சென்று வருகின்ற போது இரவு 8 மணியாகின்றது. அவர்கள் செல்வதற்குரிய போக்குவரத்து வசதிகள் அதிலும் குறிப்பாக பெண் பிள்ளைகளுக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கின்றது. எனவே கௌரவ தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வகுப்பு நடத்துபவர்களுடன் கலந்துரையாடி Bio, Maths படிக்கின்ற மாணவர்களுக்கு எமது ஊருக்குள் அம் மேலதிக வகுப்பை கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஏன் குறிப்பிட்ட பிரதேசங்களில் மாணவர்கள் தேறவில்லை. இதை ஒரு கட்டமைப்பில் கொண்டு செல்வதற்காக நிதி ஒதுக்கி இருக்கின்றோம். எப்போதும் இலவச கல்வி, இலவச மருத்துவத்தை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். நான் ஒவ்வொரு இடத்திலும் சென்று பாரத்தேன். மாணவர்களுக்கான போதியளவான வளங்களுடன் எந்த இடமுமில்லை. கல்வியில் நாம் அடிப்படையாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்னவென்றால் புலமைப் பரிசில் பரீட்சையில் எப்போதுமே எந்த ஒரு கேள்வியும் அவர்களின் பாடப்பரப்புக்களில் இருந்துதான் எடுக்கப்படும். பாடப்பரப்பிற்கு அப்பால் கேள்வி வந்ததாக நிரூபித்தால் உண்மையாக சுட்டிக்காட்டலாம். கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறினார்கள் எதிரணி கேள்விகள் கேட்க வேண்டும் என்று அதுவல்ல எமது நோக்கம். சில வேலைத்திட்டங்களை எடுத்து வந்திருக்கின்றேன். சிலருக்கு சாதகமாக இருக்கலாம்.

உதாரணமாக மல்வத்தை, வளத்தாப்பிட்டி போன்ற பிரதேசங்கள் ஏனைய காலத்தில் அபிவிருத்தி செய்யப்படவில்லை. அதை காட்டி பெற வேண்டிய சந்தர்ப்பங்களும், சாதகமும் ஒவ்வொருவருக்கும் அமையும். அதை வைத்து மற்றவர்களை ஒப்பீடு செய்ய முடியாது. மல்வத்தை சந்தை வேண்டும் என்று கூறிய உடனே அங்கீகரித்தோம். மேலும் மல்வத்தை வேலை செய்ய வேண்டும் என்று எல்லோரும் அங்கீகரித்தோம். அதுதான் நாம் இங்கு எதிர்பார்க்கின்றோம். எந்த ஒரு பாரபட்சமும் இல்லாமல் முற்றுமுழுதாக எவ் வேலைகள் வந்தாலும் ஒற்றுமையாக செய்ய வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களிடம் எமது பாதைகள் செய்கின்ற போது ஏற்பட்ட பிரச்சினைகளையும் கூறியிருக்கின்றேன். மேலும் நான் பேசிய விடயங்கள் வரவில்லை என்று சுட்டிக்காட்டினேன். நாம் சுட்டிக்காட்டத்தான் வேண்டும். சபையில் சேர்ந்திருப்பது குற்றவாளிகளை காப்பாற்றுவதற்கு அல்ல. குற்றவாளிகளை களைவதற்கும் அபிவிருத்திகளை முன்னெடுத்து செல்வதற்கும் எமது நோக்கம் இருக்க வேண்டும். எதிர்க்கட்சியாக இருந்தாலும் கட்சி பேதம் இல்லாமல் இருக்க வேண்டும். எமது பிரதேசத்தின் அனைத்து மக்களுக்கும் தொழில் வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக அமைச்சர்களிடம் இருந்து அனுமதி பெற்று மரைக்கார் சபையிலும் கதைத்துள்ளோம். எமது கௌரவ உறுப்பினர் சரிபா அவர்கள் எவ்வளவோ கண்ணியமான முறையில் அப் பிரதேசத்தில் இருக்கின்ற வளம் அழியக் கூடாது என்பதற்காக

பாடுபட்டிருக்கின்றார். நாம் ஒருபோதும் நினைக்கக் கூடாது ஒற்றுமை என்றால் எதுவும் கேட்கக் கூடாது என்று இல்லை. நிச்சயமாக கேள்வி கேட்கத்தான் வேண்டும். ஏன் என்ற கேள்வி எம்மை எங்கும் கொண்டு செல்லும். இச் சபையில் மாற்று எண்ணக்கருத்து வரக்கூடாது என்பது எனது கருத்து.

நீங்கள் என்ன சேவையை கொண்டு வந்தாலும் அதைக்கண்டு பெருமைப்பட வேண்டுமே தவிர பொறாமை படக்கூடாது. அது மனிதர்களுக்கு கீழ்தரமான செயல் ஆகும். இச் சபையில் குறைகளை சுட்டிக்காட்ட வேண்டும் என்று இல்லை. பாராட்டுவது என்றால் பலபேர் முன்னிலையிலும், கண்டிப்பது என்றால் தனிமையிலும் செய்ய வேண்டும். சபையை பொறுத்தவரையில் சந்தேகம் ஒன்று வந்தால் அதை யாராலும் நிவர்த்தி செய்ய முடியாது. கௌரவ தவிசாளரைப் பற்றி யார் கதைத்தாலும் நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஏதாவது கையாளச்செய்வதில் நான் உயிரையும் கொடுக்க தயங்கமாட்டேன். அதே போல் கௌரவ உப தவிசாளர் அவர்களின் வேலைகளில் யாராவது குறை சொல்ல வந்தால் நாம் அதை விட்டுக் கொடுக்க மாட்டோம். எப்படி கொண்டு வந்தார் என்பதற்கான தீர்க்கதரிசனமான கருத்துக்களை விளங்கப்படுத்த வேண்டும். கௌரவ தவிசாளர் அவர்கள் கூறினார்கள் உங்கள் இருப்பை பலப்படுத்திக் கொள்ளுங்கள் என்று இது ஒரு அர்த்தமுள்ள அறிவுரை அதை நாம் கவனத்தில் கொண்டு பின் தொடர வேண்டும். எமது கருத்து, எண்ணம், சிந்தனை எல்லாம் அபிவிருத்தியும், அடைவும் என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நிலுவ்பா அவர்கள் கூறியது போல் மேலதிக வகுப்புக்கள் கல்முனையில் 2020 ஜனவரியில் இருந்து நடத்தக்கூடாது என்று சென்ற மாதம் கல்முனை மாநகர சபை மேயர் பாரிய அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார். எனவே இனிமேல் தொடருமா என்பது ஒரு சந்தேகம். வகுப்பு நடத்துவதில் நாமும் எதிர்ப்புக்களை தெரிவிக்க வேண்டும் என்பதுதான் எனது அவா. ஏன் பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் பாடசாலையில் கற்றுக் கொடுப்பது கஸ்டம் என்று இவர்கள் உழைப்பிற்காக ஒரு மேலதிக வகுப்பு நடத்துவது என்பது உண்மையிலே நல்ல செயல் அல்ல. கல்வி என்பது பாடசாலையில் படித்தவற்றை வீட்டில் மீட்பதற்கும் நேரம் ஒதுக்கப்பட வேண்டும்.

ஒரு பிள்ளை வகுப்புக்கு சென்றால் அதை பார்த்து மற்றவர்களும் என்னுடைய பிள்ளையும் படிக்க வேண்டும் என்று கஸ்டப்பட்டு அனுப்புகின்றார்கள். இதனால் அப் பிள்ளைகள் எதை படிப்பது என்று தெரியாமல் தாயின் கட்டளைக்காகத்தான் செல்கின்றோம் ஆனால் எதுவுமே விளங்குதில்லை என்று கூறுகின்றார்கள். ஒரு பிள்ளை பாடசாலைக்கு சென்று படித்து விட்டு வீட்டுக்கு வந்தால் அப் பிள்ளையின் மூளை ஓய்வு எடுப்பதற்கு எப்படியாவது 03 அல்லது 04 மணித்தியாலயம் தேவை. ஆனால் அவ்வாறு இல்லாமல் சாப்பிட்ட குறையுடன் அல்லது சாப்பிடாமல் அவ் வகுப்புகளுக்கு சென்று படிப்பதால் அது ஏட்டுச் சுரைக்காயாகத்தான் மாறுமே தவிர ஒரு எழுத்தாக மாறாது.
தற்போது பெய்த மழை காலத்திலே எமது கௌரவ உறுப்பினர்கள் கூறியது போல் சூழல் பாதுகாப்பு குழு இயங்காமல் இருப்பது மிகவும் மனவருத்தத்திற்குரியது. அதில் நானும் ஒரு அங்கத்தவர். ஏனென்றால் வடிகானை காட்டும் போது எனக்கு அடி விழுந்து பொலிசுக்கு சென்று நீதிமன்றத்தில் நின்ற போது எனக்கு பின்னால் நின்று உதவி செய்வதற்கு எந்த உறுப்பினர்களும் வரவில்லை. அந்த நேரம் நான் தனித்து ஒருவளாகத்தான் நின்றேன். தற்போது வெள்ளத்தில் வடிகான்கள் தடைபட்டு பாதிக்கப்பட்ட போது அப் பிரதேச மக்கள் எல்லாரும் வந்தார்கள் அதற்கு நான் கூறினேன் நீர்பாசனத் திணைக்களத்தில் சென்று முறையிடுங்கள் இதற்கு நான் பொறுப்பாளி அல்ல என்று அவர்களிடம் கூறினேன்.

உறுப்பினர்கள் சென்று அவ் இடத்திலே இதை செய்ய வேண்டும் என்பதில் எமக்கு வேறுபக்க உதைப்புகள் அதாவது அறைந்து சாத்தப்பட்ட கதவுகளுக்கு தெரியுமாம் வெளியில் இருப்பவை மனவேதனை என்று அதாவது கதவு அடபட்டு உள்ளுக்கு இருப்பவர்களுக்கு வெளியில் என்ன செய்கின்றார்கள் என்று தெரிவதில்லை. எனவே கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் நீர்பாசனத் திணைக்களத்திற்குரியது அவர்தான் பார்க்கனும், பிரதேச செயலகத்திற்குரியது அவர்தான்

பார்க்கனும், பிரதேச சபைக்குரியது அவர்தான் பார்க்கனும் என்று இல்லாமல் சூழல் பாதுகாப்பு குழுவில் இருக்கின்றவர்கள் இணைந்து அப் பிரதேசத்தை பார்வையிட்டு எங்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமோ அங்கு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன் மீண்டும் எமது சேவையை எல்லோரும் ஒன்று சேர்ந்து செய்ய வேண்டும் என்பதையும் நான் எனது மனமார தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களின் கருத்துக்களை உள்வாங்கியவனாக, கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் கூறியதில் நான் ஒரு முன்மொழிவை செய்திருக்க வேண்டும். அதாவது பழைய மடுவத்தை வைத்து ஏதாவது செய்யலாமா என்று Technical Report எடுத்தவுடன் அக் கட்டடத்தை பாவிக்க இயலாது. அதனால் அப் பழைய கட்டடத்தையும் அதனுடன் சேர்ந்த தொகுதியையும் அகற்றி அப் பிரதேசத்தில் நூலகம், Study Centre அமைப்பதற்கு சபையின் தீர்மானம் எடுக்க வேண்டும். ஏனென்றால் அக் கட்டடங்கள் உடைப்பது என்றால் அதற்கு அங்கீகாரம் பெற வேண்டும்.

**தீர்மானம் - 04/22/16**
பழைய மடுவ தொகுதியில் இருக்கும் கட்டடங்களை அகற்றி புதிய அபிவிருத்திக்கு அவ் இடத்தை நூலகம், Study Centre ஆக மாற்றுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/22/17**
PSDG – 2017 ஒதுக்கீட்டில் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட பெறுமதி சேர் வரி (VAT) உரிய காலத்தில் இறைவரித் திணைக்களத்தில் உரிய ஒப்பந்தகாரர் பதிவு செய்யாத காரணத்தினால் எமக்கு மீள திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த நிதியினை விலங்கு அறுமனையில் Treatment Plan ஐ புணரமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/22/18**
PSDG – 2019 திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதி மூலம் புனருத்தாரனம் செய்யப்பட்ட அப்துல் மஜீட் மண்டபத்தின் மீதமான வேலைகளை செய்வதற்குத் தேவைப்படும் மேலதிகமான நிதிக்கு சபை நிதியினை பயன்படுத்துவதறகான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந் நாட்டில் மிகப் பெரிய வியாபாரம் கல்வியும், சுகாதாரமும் ஆகும். நானும் ஏரத்தாள 06 வருடமாக ஆசிரியராக இருந்தேன். நான் சில நேரம் கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி, கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் சேர்ந்து எங்களது காலத்தில் ஆசிரியர் தொழில் தொடர்பில்

கதைப்பதுண்டு கௌரவமான தொழில் அது. மேலதிக வகுப்பு என்பது இலவசமாகத்தான் நடந்ததே தவிர ஒரு வியாபாரமாக நடக்கவில்லை. ஒரு ஆழமான கருத்தை கேட்டேன் அதாவது நமது காலத்தில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் பங்களிப்போடு நாம் வளர்ந்தோம், இன்று பிள்ளைகளை வளர்க்கின்றோம். உங்களுக்கு தெரியும் 5ஆம் ஆண்டு வகுப்புக்கு கீழ் உள்ளவர்களும் இரவு 8 மணி வரையும் வகுப்புக்கு செல்கின்றார்கள். Tuition Centre களின் வளங்களை பார்ப்பதற்கு எமக்கு கடமை இருக்கின்றது. உண்மையாக சம்மாந்துறையில் நடக்கின்ற எந்த ஒரு Tuition Centre உம் தகுதி இல்லாத இடம் ஆகும். ஆனால் அதை பார்க்கச் சென்றால் பெற்றோர்கள் எங்களது பிள்ளைகளின் படிப்பை தடுப்பதற்கு வருகின்றார்கள் என்று கூறுவார்கள்.

கல்முனையில் வகுப்புக்கு செல்வதற்கு காரணம் அங்கு மாணவர்களுக்கு தேவையான வளங்கள் காணப்படுகின்றது. மேலும் தகுதியான விரிவுரையாளர்களை வைத்து நடாத்துகின்றார்கள். பெற்றோர்கள் இதன் ஆபத்தை விளங்க வேண்டும். ஏனென்றால் தற்போது பிள்ளைகள் விளையாடுதா? மரம் ஏறுதா? இல்லை. பிள்ளைகள் காலையில் எழுந்ததில் இருந்து தூங்கும் வரைக்கும் படி படி என்று கூறுகின்றோம். இது எங்கு சென்று முடியும் என்று காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ஒரு சபையாக நாம் அடிப்படை வசதிகளை செய்து தெளிவாக கதைக்க வேண்டும்.

கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியது போல் ஒவ்வொரு வட்டாரத்திலும் வல்லுனர்கள் இருக்கின்றார்கள். நாம் பிரதேச சபை சட்டத்தை செய்து நாட்டுக்கு என்று National Plan, Provincial Plan இருக்கின்றது. இவ் இரண்டிலும் வருகின்ற திட்டங்களில் என்ன என்ன திட்டங்களை எமது வட்டார மட்டத்தில் செய்யலாம். அதற்குரிய Project Report 4 பேரை சேர்த்து சபை மூலமாக செயற்படுத்தலாம். நமக்கு வளம் இல்லாவிட்டாலும் சபை மூலமாக செய்வதன் மூலம் அது வலுவடைகின்றது. கௌரவ உப தவிசாளர் அவர்கள் சில விடயங்களை செய்தார் அதை நாம் பாராட்ட வேண்டும். நீங்களும் ஒரு அங்கத்தவர் என்ற வகையில் ஒரு திட்டத்தை உருவாக்கி சபை மூலமாக அனுப்புவதன் மூலம் நிச்சயமாக இவ் அரசாங்கத்தில் அது நடக்கும். கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் கூறியது போல் இவ் அரசாங்கத்தின் கையில் தான் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றது. மேலும் இவ் வருடத்தின் சபை நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறியவனாக, சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.